**முகப்போவியம்: 451**

# புலவர் சீர்காழி ஜெ. சண்முகம்



– முனைவர் இளமாறன்

**நூ**லகத் தந்தை எனப் போற்றப்பெறும் சீர்காழி இரா. அரங்கநாதன் அவர்கள் சீர்காழி சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப் பள்ளியில் பயின்றவர். இப்பள்ளியில் பயின்ற பலர் இன்று பல்வேறு துறைகளில் உயர் நிலையில் மிளிர்கின்றனர். இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் சிலர் இப்பள்ளியின் ஆசிரியர் களாகவும் உயர்ந்துள்ளனர். முகம் இதழில் செவ்விலக்கியத் தொடர் எழுதிவரும் 90 அகவையைக் கடந்த காழிக்கம்பன் மு. வேங்கடேசபாரதி இப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

இவர்களின் வரிசையில் பன்னூலாசிரியரான புலவர் ஜெ. சண்முகம் அவர்கள் இப்பள்ளியில் சிறந்த தமிழாசிரியராகப் பணி யாற்றி மாணாக்கர்களின் மதிப்பைப் பெற்று ஓய்வு பெற்ற பெருமைக்குரியவர்.

இவர் சிறந்த புலமையாளர், செவ்விலக்கியங்களில் ஆழங்கால் ஊன்றியவர். இவர் திருமுறைகளில் தோய்ந்தவர் என்பதற்குச் சான்றாக இவருடைய பாக்களில் தமிழும், சந்தமும், சொற்செறிவும், எளிமை யும் இழையோடுகின்றன.

இவர் 33 நூல்கள் படைத் துள்ளார். அவற்றில், பைந்தமிழ்ப் பாச்சரங்கள், பல்சுவை இலக்கியக் கட்டுரைகள், புறநானூறு உணர்த்தும் வாழ்வியல், தமிழ்ச் சான்றோர் வரலாறு, மனத்தில் பூத்த மலர்கள், கடவூர் மணிமாறனின் வாழ்க்கை வரலாறு, முத்தமிழ்க் கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்களின் வாழ்வும் எழுதிய நூல்களும், வாழ்வியல் நெறிகள், நேர்பட ஒழுகு, வெண்பாக்கள் - 250, சிந்தனைச் சிதறல்கள், கருத்தரங்கக் கட்டுரைகள், சிற்றிலக் கியங்களின் சிறப்புகள், வண்ணச் சோலையில் எண்ண மலர்கள், ஔவையாரின் வாழ்வும் வாக்கும், மறுமலர்ச்சிப் பாடல்களும் சமுதாயத் தாக்கமும், பெண்ணியம் போற்றுவோம், யோகாவும் சிறப்பும், வெற்றிச் சிந்தனைகள், அருட்பா அமுதம், வள்ளுவர் முதல் வள்ளலார் வரை, கலித்தொகை உணர்த்தும் பண்பாடுகள், பாவேந்தர் பாக்களில் சமூகச் சிந்தனைகள், நல்வாழ்விற்கு ஆசாரக் கோவை ஆகிய நூல்கள்

பொதுநிலை நூல்களாகும். சமயம் சார்ந்த நூல்களிலும் மானுடம் போற்றும் மாண்பாளராக இவர் திகழ்கிறார்.

திருவாளர் ஜெகநாதன் - திருமதி அஞ்சம்மாள் இணையருக்கு 23.09.1948இல் பிறந்த இவர், பள்ளிக் கல்விக்குப் பின், நாகை கனகசபை தமிழ்க் கல்லூரியல் புலவர் பட்டமும், சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சியும் பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.லிட்., பட்டமும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ,. எம்.ஃபில் பட்டங்களையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை, முதுகலை கல்வியியல் பட்டங்களையும் பெற்றவர். மேலும் இவர் யோகாவும் ஆளுமையும், மனித உரிமையும் மேலாண்மையும், திருமுறையும் சைவசித்தாந்தமும் உட்பட ஐந்து பட்டயப் படிப்புகளைக் கற்றுத் தேர்ந்தவர்.

திருத்துறைப்பூண்டி சாமியப்பா நகரில் இயங்கிவரும் மறைமலையடிகளார் மகளிர் கல்லூரியில் 1975-76 ஆகிய இரு ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். சீர்காழி பெஸ்ட் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் 2007-08 ஆகிய இரண்டு ஆண்டு கள் துணை முதல்வராகவும், தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்.

இவருடைய இலக்கியப் பணிகளைப் பாராட்டிப் பல அமைப்புகள் விருதுகளும் பட்டங் களும் வழங்கிச் சிறப்பித்துள்ளன. சிறப்புக்குரியோரின் சிறப்பியல்பு களைப் பாராட்டி இதுவரை 470 வாழ்த்துப் பாக்களைப் பாடியுள்ளார். அதனால் 'வாழ்த்துப்பா வித்தகர்' என்ற சிறப்புப் பட்டம் இவருக்கு உண்டு. மரபுப் பாமணி, கவிமுரசு, இலக்கியச் செல்வர், திருமுறைத் தொண்டர். சித்தாந்த ரத்தினம் உள்பட 85 விருதுகளைப் பெற்றுள்ளார்.

திருவாவடுதுறை ஆதீனம் 2014இல் இவருக்கு 'சைவத் தமிழ்ச்சீலர்' என்ற பட்டமும் பண முடிப்பும் அளித்துப் பாராட்டியுள்ளது. 2016இல் தமிழ்நாட்டு அரசு 'தமிழ்ச் செம்மல்' விருதும் பணமுடிப்பும் அளித்துப் பாராட்டியுள்ளது. இவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 'நாடறிந்த நல்ல தமிழறிஞர்' என்ற தலைப்பில் 150 பக்கங்களில் இவரைப் பற்றிப் புத்தகம் எழுதிப் பாராட்டியுள்ளது.

தமிழகத்தில் பல கருத்தரங்கு களில் இவர் பங்கேற்று கட்டுரைகள் வழங்கியிருப்பதுடன், பன்னாட்டுக் கருத்தரங்குகளிலும், மலேசியா, சிங்கப்பூர் நாடுகளின் கருத்தரங்கு களிலும் பங்கேற்று கட்டுரைகள் வழங்கியுள்ளார்.

தமிழாசிரியர் கழக மாவட்டச் செயலாளர், நாகை தொழில்நுட்பக்

கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர், சீர்காழி பொதுநூலக வாசகர் வட்டத் தலைவர் ஆகிய பொறுப்புகளில் இருந்தவர்.

சீர்காழிப் பகுதிகளில் இயங்கும் பல அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு தமிழ்ப்பணி ஆற்றி வருவதுடன் அந்த அமைப்புகளுக்கு வேண்டிய உதவிகளையும் செய்து தமிழ்த் தொண்டாற்றி வருகின்றார். இவருடைய நல்லுள்ளத்தைப் போற்றிப் பாராட்டி, இவரது தொண்டு தொடர வாழ்த்தி மகிழ்கிறோம்.

பேச: 98412 28700